சொன்னால் அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நியாயமாக இதைச் செய்வார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 62, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.*

62—

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து மருத்துவர்களுக்கு விலக்கு அளித்தல்

24411-டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து மருத்துவர்களை விடுவிக்கும் கருத்தை மாநில அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1986-ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் மற்றும் மத்திய ஆணையம் ஆகியவை மருத்துவப்பணி இச்சட்டத்தின் விதி 2(1) (0)-ன்கீழ் பணி என்னும் தலைப்பின் கீழ் வரும் என்ற கருத்தையே கொண்டிருந்தது. இந்நிலையில்தான் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து மருத்துவர்களை விடுவிக்க வேண்டும் என்று மாநிலத்திலுள்ள இந்திய மருத்துவக் குழுவின் (Indian Medical Association) *பல்வேறு கிளைகள் அனுப்பியிருந்த கோரிக்கைகள் பரிசீலனைக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதற்கிடையில், 17-2-1994 அன்று சென்னை உயர்நீதிமன்றம் தன்னுடைய* Writ Jurisdiction*-படி அதனை ஆராய்ந்து மருத்துவப் பணி இச்சட்டத்தின்கீழ் வராது எனத் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பின் நகலும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இந்தப் பிரச்சினை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதுகுறித்து உச்சநீதிமன்றத்தின் ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.*

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புச்

1994 நவம்பர் 9]

சட்டப்படி நுகர்வோர் நீதிமன்றத்தில் நியாயம் வழங்குவதை மருத்துவர்கள் அனைவரும் வரவேற்கின்றனர். அதேசமயம், மருத்துவப் பணியானது வருவாயை மட்டும் நம்பியிராமல் மக்களுக்குத் தொண்டு செய்கின்ற ஒரு இயக்கமாக அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை இயங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே, உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டு இருந்தாலும் அவர்கள் பரிந்துரை செய்தாலும் இதை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைத்து தமிழகத்தில் உள்ள மருத்துவர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து மருத்துவர்களுக்கும் இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: தலைவர் அவர்களே, இது இந்தியத் துணைக் கண்டத்தின் அளவில் பொதுவாக விவாதித்து ஒரு முடிவு காண வேண்டிய பொருளாக விவாதிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று மருத்துவர்கள் சேவை உணர்வோடு பணியாற்றுகிறார்கள் என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றாலும் எல்லாப் பிரிவிலேயும் தவறு செய்கிறவர்கள் இருப்பதைப்போல மருத்துவர்களிலேயும் இருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தையும் பொது மக்கள் மத்தியிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மருத்துவர்கள் இதற்கு விதி விலக்கு வேண்டும் என்று கேட்கிற அதே நேரத்தில் இந்த விதிவிலக்கை அளிக்கக்கூடாது என்று மக்கள் மத்தியிலே இதற்காக எதிர்ப்பும், போராட்டங்களும், உண்ணாவிரதங்களும்கூட நடத்தப்பட்டு இருக்கின்றன. ஆகவே இது ஒரு முக்கியமான பிரச்சினை. இது இந்திய அளவிலே விவாதித்து முடிவு எடுக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. இப்போது உச்ச நீதிமன்றத்திலே இந்தக் கருத்து பரிசீலிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே தனியாக நம்முடைய மாநில அரசினுடைய கருத்தை இந்த நேரத்திலே தெரிவிப்பது அவ்வளவு உகந்தது அல்ல.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து அரசு மருத்துவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரே துறையைச் சார்ந்தவர்களில் தனியார் மருத்துவர்களுக்கு ஒரு நீதியும் அரசு மருத்துவர்களுக்கு ஒரு நீதியும் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இதில் நீதிபதியாக நியமிக்கப்படுகிறவர்கள் அரசு அலுவலர்கள் என்ற முறையில் ஒரு

[*1994 நவம்பர் 9*

ஜூனியர் அஸிஸ்டெண்ட் கேட்டகரியிலிருந்து வருபவர்கள் நீதிபதியாக நியமிக்கிறார்கள். மருத்துவர்கள் என்ன செய்கிறார்கள், மருந்துகளுடைய தன்மை என்ன என்பதை எல்லாம் அறியாதவர்களை நீதிபதிகளாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே வர இருக்கின்ற காலகட்டத்தில் அரசு மருத்துவர்களுக்கு அளித்ததைப் போல தனியாருக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல் அவ்வாறு நீதிபதிகளாக நியமிக்கின்றபோது அந்தந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டவர்களை நீதிபதிகளாக நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–15*

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறவர்கள் எல்லாத் துறைகளிலேயும் தேர்வுபெற்ற, சிறந்த நிபுணர்கள் என்ற அடிப்படையிலே நியமிப்பது கிடையாது. அதைப்போல இந்த நீதிமன்றத்தில் ஒரு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியும், பொது மக்களிலேயிருந்து இரண்டு உறுப்பினர்கள்--ஒருவர் ஆணும், ஒருவர் பெண்ணும் நியமிக்கப்படுகிறார்கள். பொதுமக்களுடைய பிரச்சினைகள் பொதுமக்களுடைய பார்வையிலே இருந்து, இந்த வழக்குகள் பரிசீலிக்கப்படுகின்றன. இந்தக் குறைகள்தான் பரிசீலிக்கப்படுகிறதே தவிர, நிபுணர்கள் என்கிற அளவிலே பரிசீலிக்கப்படுவது இல்லை. இதைப்பற்றிய பல்வேறு விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தையே இந்தியன் மெடிக்கல் அசோஸியேஷன், பல மருத்துவ நிபுணர்களின் சார்பிலே சொல்லி வருகின்றது. அதற்குப் பல்வேறு எதிர் கருத்துக்களும் எடுத்து வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கிறபோது அந்த மருத்துவ நிபுணர்களைக் கலந்தாலோசித்துச் செய்வதற்கு வழிவகை செய்ய முடியுமா என்கிற கருத்தும் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு பொதுப் பிரச்சினை; முக்கியமான பிரச்சினை. மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். மக்களுக்குச் சேவை என்கிற பெயரிலே அல்லது தொழில் என்கிற பெயரிலே ஏமாற்றம் அளிக்கக்கூடாது அல்லது தவறுகள் நிகழக் கூடாது என்பதன் அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்காக அமைக்கப்படுகிற நீதிமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களும், நீதிபதிகளும் எல்லாவற்றையும் தெரிந்தவர்களாக இருப்பதற்கு இயலாது. பொதுவாக

1994 நவம்பர் 9]

இந்தக் கருத்து பரிசீலனையிலே இருக்கிறது. இதைப் பற்றிய ஒரு இறுதியான முடிவை இப்போது சொல்ல இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்ஸ்யூமர் ஆக்ட் என்பது மருத்துவர்களுக்குப் பொருந்தாது. ஏனென்றால், இது சாதாரணமாக வியாபாரிகளுக்காக வைக்கப்பட்டது. வியாபாரிகள் கலப்படம் செய்கிறார்கள்; குறைந்த அளவு போடுகிறார்கள் என்று அதைத் தடுப்பதற்காக வைக்கப்பட்டது. மருத்துவர்கள் அப்படியில்லை. ஒரு மனிதனின் உடம்புக்கும், இன்னொரு மனிதனின் உடம்புக்கும் வித்தியாசம் நிறைய இருக்கும். ஒரே மாதிரியாக இருக்காது. அடுத்து நோயாளிகள் டாக்டரிடம் போகிறபோது முழு ஹிஸ்டரியையும் சொல்லமாட்டார்கள். 4 வைத்தியர்களிடம் போய்விட்டு, ஐந்தாவதாக இன்னொரு டாக்டரிடம் போவார்கள். அவர் வேறு விதமாக ட்ரீட்மெண்ட் கொடுப்பார். அவருக்கு அந்த நோயாளியின் முன் ஹிஸ்டரி தெரியாது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். வைத்தியர்கள் எந்த வகையிலே இதனுள் கட்டுப்படமாட்டார்கள் என்று சொல்லுங்கள்.

திருமதி ஜீனத் சர்புதீன்: பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தியர்கள் ஜோசியர்கள் அல்ல. அவர்களுக்குத் தெரிந்த முறையிலே வைத்தியம் பண்ணுகிறார்கள். ஆகையால் அவர்களை கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு இழுப்பது சரியல்ல என்பது மறுபடியும் வலியுறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைத்தான் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மருத்துவர் என்கிற அந்த உரிமையோடு இங்கே இந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்பி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் மருத்துவர் அல்ல, அவருடைய கணவர் ஒரு மருத்துவர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய குடும்பத்திலே அவர்

கணவர் மருத்துவராக இருக்கிறார் என்கிற உணர்வோடு கணவருக்காக வாதாடுகிற பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர் தெரிவித்த கருத்திலே ஒரு குறை. இந்தச் சட்டம் வியாபாரிகளுக்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்று சொன்னார்கள். அப்படியில்லை. வியாபாரிகளுக்கென்று பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. தவறு செய்வதை, கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு கலப்படத் தடுப்புச் சட்டம், எடை-அளவுச் சட்டம் என்று பல சட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டம் என்பது உலகம் முழுவதிலும் இப்பொழுது மக்களுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம். மக்களில் எல்லாப் பிரிவினரும் இதில் வருவார்கள். இன்னும் சொல்லப்போனால் மருத்துவர்களை இதிலே சேர்க்கக்கூடாது என்று வாதிடுகிறார்களே மருத்துவர்கள், அந்த மருத்துவர்களுக்கே துன்பம் என்று வருகின்றபொழுது அவர்களும் இந்த நீதிமன்றத்திற்குத்தான் வந்தாக வேண்டும். அவர்களுக்குச் சங்கடம் என்று வருகிறபோது இங்கே வந்தாக வேண்டும். ஆகவே, இது மக்களுக்காக இயற்றப்பட்ட ஒரு சட்டம். இதிலே எல்லாப் பிரிவினரும், மக்களுக்கு உண்மையாக, தூய்மையாக, அவர்கள் ஏற்றுக் கொண்ட தொழிலை நிறைவாகச் செய்கிறார்களா, சேவை செய்கிறார்களா என்பதைப் பரிசீலித்து, அதை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற சட்டம். ஆகவே, மீண்டும் மருத்துவர்களை இதிலேயிருந்து விலக்களிக்க வேண்டும், சேர்க்கக்கூடாது என்கிற ஒரு விவாதத்தை இப்போதும் நாம் நீட்டிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இருக்கையில் இல்லை.

வினா எண் 64, திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

64—

கொல்லிமலையில் அரசு மருத்துவமனை அமைத்தல்

24892–திரு. கா. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் அரசு மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?